**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.9/2024 PW.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விஷ்ணுவர்தன். | த–பெ | பட்டாபிராமன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 43/2024 | வட்டம்: | |
| தொழில்: | : | HDFC Bank, Dept. Manager, karaikudi | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2024**

---------------------------------------------------------------------------------------------------------

25.11.2024

முதல் விசாரணை:

1) நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. வினோத உதயக்குமார் என்ற வாடிக்கையாளரின் கணக்கீட்டு பட்டியை தாக்கல் செய்ய சொல்லி சம்மன் வந்தது. வங்கி கணக்கு எண் 50100175493640 ஆகும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 2 காசோலை எங்கள் வங்கியில் இருந்து மேற்கண்ட வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டதாகும். கடந்த 30.09.2023 ல் மேற்படி வாடிக்கையாளரின் வங்கி கணக்கில் தொகை (–) 126 இருந்தது. கடந்த 05.09.2023 ல் மேற்படி வாடிக்கையாளரின் வங்கி கணக்கில் தொகை (–) 1 இருந்தது. 01.07.2023 முதல் 28.09.2023 வரையான **வங்கி கணக்கு பட்டியல் ம.சா.ஆ. 6 ஆகும்.**

<u>**குறுக்கு விசாரணை**</u>

1) ம.சா.ஆ. 6 கணக்கீட்டு பட்டியல் படி இவ்வழக்கு காசோலை stop payment செய்யப்பட்டுள்ளதா என்றால் ம.சா.ஆ.6 ன் படி அந்த காலக்கட்டத்தில் இல்லை. அதற்கு முன்பு பார்க்கவில்லை. ம.சா.ஆ.6

ஆவணத்திற்கு முன்பு தேதியில் stop payment செய்யப்பட்டிருந்தால் ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் சொல்ல இயலுமா என்றால் இயலும், தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை. ம.சா.ஆ,3 ஆவணம் எந்த காரணம் கண்டு திருப்பப்பட்டது என்றால் காசோலை எங்கள் வங்கியில் வசூலுக்கு வரவில்லை. ம.சா.ஆ.3 ன் படி எங்கள் வங்கியில் இருந்து இந்தியன் வங்கிக்கு அறிவுறுத்தவில்லை என்றால் சரிதான். ரிட்டன் மெமோவில் குறிப்பிட்டுள்ளபடி கணக்கு எண் முடிக்கப்படவில்லை. மேற்படி வங்கி கணக்கு பயன்பாட்டில் உள்ளது. நான் கொண்டு வந்துள்ள ஆவணங்கள் படி வழக்கிற்கு தேவையான சாட்சியத்தை என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்று என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.